

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 165 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 12 – சனிக்கிழமை 25 ஜனவரி 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 165 : Thiruvalluvar Year - 2056 - Thai 12 - Saturday 25 January 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


## உலகுக்கு அறிவிப்பதில் பெருமை: 5,300 ஆண்டுகளுக்கு முன்பே

# தமிழ் நிலப்பரப்பிலிருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியது!

## தொல்லியல் துறையின் வரலாற்று ஆய்வு நூலை வெளியிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரகடனம்!

**சென்னை, ஜன.25-**

**சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில், தொல்லியல் துறை சார்பில் அருங்காட்சி யகங்களுக்கு அடிக்கல் நாட்டி, 'இரும்பின் தொன்மை' எனும் ஆய்வு நூலினை வெளியிட்டு உரையாற்றிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், "5,300 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியது" என்ற வரலாற்று ஆய்வை அகிலத்திற்குப் பிரகடனம் செய்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (23.1.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தொல்லியல் துறை சார்பில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி நமது தமிழ்க்குடி"என்று பெருமை பொங்க நாம் சொன்னபோது 'வெற்றுப் பெருமை பேசுகிறார்கள்' என்று, சிலர் விமர்சித்தார்கள். அதற்குக் காரணம், தமிழ்ச் சமுதாயத்தில் வந்து புகுந்த இழிவுகளும் - அதனால் ஏற்பட்ட தேக்க நிலையும்தான் காரணம்! இந்த இடைக்கால இழிவுகள் நீங்க காலம்தோறும் எண்ணற்ற புரட்சியாளர்கள் தோன்றினார்கள். அய்யன் வள்ளுவர், வள்ளலார் தொடங்கி அயோத்திதாசப் பண்டிதர் என அந்தப் பட்டியல் நீளமானது... அவர்களின் தொடர்ச்சியாகத்தான், பகுத்தறிவையும் இனமான உணர்வையும் ஊட்டினார் தந்தை பெரியார்!

பண்பாட்டு ரீதியாக அடிமைப்படுத்தப்பட்டுக் கிடந்த நமது தமிழினத்தை, "ஏ தாழ்ந்த தமிழகமே" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய சிந்தனையாலும், நா நயத்தாலும் தட்டியெழுப்பினார்! சங்க இலக்கியத்தில் சொல்லப்பட்ட நம்முடைய வாழ்வியலை திராவிட இயக்க மேடைகள் தோறும் எடுத்துச் சொன்னோம்! இலக்கியங்கள் படைத்தோம். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் "இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும்... இங்கு வீணை நரம்பினிலே இசை துடிக்கும்... அதுவும் மானம் மானம் என்றே முழங்கும்!" என்று சங்கத்தமிழைச் சாறெடுத்து, நம்முடைய வரலாற்றை எடுத்துச் சொன்னார்!

### தமிழ்ப் பண்பாட்டை உலகுக்குச் சொல்லும் விழா!

ஆனால், இந்த இலக்கியப் பெருமைகளை மெய்ப்பித்து, பரந்துபட்டு வாழ்ந்த தமிழினத்தின் புதையுண்ட வரலாற்றை மீட்டெடுத்து, அறிவுலகத்துக்கு அறிவிக்கவேண்டும் என்றும்; வரலாற்றுப் படிப்பினைகள் வழியாக, முன்னேறும் நிகழ்காலத்தில் இருந்து, மேலும் சிறப்பான எதிர்காலத்துக்கு தமிழர்களை வழிநடத்த வேண்டும் என்றும், நம்முடைய உழைப்பை செலுத்தி வருகிறோம்! அந்த உணர்வோடுதான் நாம் இங்கு கூடியிருக்கிறோம்! ஐம்பெரும் விழாவாக இந்த விழாவை நடத்திக்கொண்டு இருக்கிறோம்!

- இரும்பின் தொன்மையை நாட்டுக்கு அறிவித்தல்
- 'இரும்பின் தொன்மை' நூலை வெளியிடுதல்
- கீழடி திறந்தவெளி அருங்காட்சியகத்துக்கும் கங்கைகொண்ட சோழபுரம் அருங்காட்சியகத்துக்கும் அடிக்கல் நாட்டுதல்
- கீழடி இணையத் தளத்தைத் தொடங்கி வைத்தல் என்று தமிழ்ப் பண்பாட்டை உலகுக்குச் சொல்லும் விழாவாக இந்த விழா சிறப்பாக நடந்துக்கொண்டு இருக்கிறது!

தொன்மையும் திண்மையும் வளமையும் பெருமையும் கொண்ட தமிழ்நாட்டின் சிறப்பை வெளிப்படுத்தும் விழாவாக இந்த விழாவை ஏற்பாடு செய்திருக்கும், அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களையும், அரசு முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன் ஆகிய இருவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுகள்! வாழ்த்துகள்!

### தமிழர்களின் தொன்மையை சொல்லும் மானுடவியல் ஆய்வுப் பிரகடனம்!

**இந்த விழாவின் மூலம் முக்கியமான அறிவிப்பு ஒன்றை வெளியிடப் போவதாக நேற்று சொல்லியிருந்தேன்... பலரும் என்ன அறிவிப்பு என்று கேட்டுக்கொண்டே இருந்தார்கள். இந்த நிகழ்ச்சிக்கு வருகின்றவரையில் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். தமிழர்களின் தொன்மையை உலகத்திற்கே சொல்லும் ஒரு மாபெரும் ஆய்வுப் பிரகடனத்தை இப்போது நான் அறிவிக்கப் போகிறேன்... இங்கு கூடியிருப்பவர்களும், நேரலையில் இந்த விழாவை பார்ப்பவர்களும் கவனமாக கேளுங்கள்.**

**தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியது! இந்திய நாட்டுக்கு மட்டுமல்ல. உலகிற்கே மீண்டும் சொல்கிறேன். தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியது என்ற மாபெரும் மானுடவியல் ஆய்வுப் பிரகடனத்தை இந்த நிகழ்ச்சி வாயிலாக அறிவிக்கிறேன்!**

5 ஆயிரத்து 300 ஆண்டுகளுக்கு முன்பே 'உருக்கு இரும்பு தொழில்நுட்பம்' தமிழ் நிலத்தில் அறிமுகமாகிவிட்டது! இப்போது, தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் மூலம் அண்மையில் கிடைக்கப்பெற்ற

தொடர்ச்சி 2ஆம் பக்கம்



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.1.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தொல்லியல் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், "இரும்பின் தொன்மை" என்ற தமிழ் மற்றும் ஆங்கில நூலினை வெளியிட்டார். இந்த விழாவில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தொல்லியல் துறை ஆணையர் த. உதயச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை முதன்மைச் செயலாளர் பி. சந்தர மோகன், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திலீப் குமார் சக்ரவர்த்தி, இந்திய தொல்லியல் துறை மேனாள் தலைமை இயக்குநர் முனைவர் ராகேஷ் திவாரி, தொல்லியல் துறை கல்வியியல் மற்றும் ஆய்வு ஆலோசகர் பேராசிரியர் கா. ராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

> **"தமிழ், தமிழ் நிலம், தமிழ்நாடு குறித்து நாம் இதுவரை சொல்லி வந்ததெல்லாம் இலக்கியப் புனைவுகள் அல்ல; அரசியலுக்காகச் சொன்னவை அல்ல; எல்லாம் வரலாற்று ஆதாரங்கள். உலக அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை என்று மெய்ப்பிக்க வேண்டிய கடமையை நம்முடைய திராவிட மாடல் அரசு எடுத்துக் கொண்டுள்ளது! ஏற்றுக் கொண்டுள்ளது! தமிழனின் பெருமையை தமிழினத்தின் தொன்மையை உலகம் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டதை சொல்லும் வரலாற்றுப் பெருமைமிக்க இந்த விழா, நாம் வாழும் காலத்தில், நான் ஆளும் காலத்தில் நடைபெறுவது என் வாழ்நாளில் கிடைத்திருக்கக்கூடிய பெருமை! பெருமையிலும் பெருமை! பெறுதற்கரிய பெருமை!"**

---

## ரூ.15.54 கோடி மதிப்பீட்டில்

# மயிலாப்பூர் திருவள்ளுவர் கோயிலை கருங்கல்லால் புனரமைக்கும் பணி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார்!





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.1.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 15.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை, மயிலாப்பூர், திருவள்ளுவர் திருக்கோயிலை கருங்கல்லினால் புனரமைக்கும் பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், தலைமைப் பொறியாளர் பொ. பெரியசாமி, இணை ஆணையர் பொ.ஜெயராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜன.25-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.1.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 15.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை, மயிலாப்பூர், திருவள்ளுவர் திருக்கோயிலை கருங்கல்லினால் புனரமைக்கும் பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.**

இந்து சமய அறநிலையத்துறை தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகளை மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல், அன்னதானத் திட்டம் விரிவாக்கம், மலைத் திருக்கோயில்கள் மற்றும் முக்கிய திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் அமைத்தல், புதிய கல்வி நிறுவனங்களை தொடங்குதல், ஒருகால பூஜை திட்டம் விரிவாக்கம், துறையின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதோடு, சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### கோயில் திருப்பணிகளை கலைஞர் தொடங்கிவைத்தார்!'

மயிலாப்பூர், திருவள்ளுவர் திருக்கோயிலானது 61,774 சதுர அடி நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இங்கு திருக்கோயில், கட்டணமுறை வாகன பாதுகாப்பு மையம், திருவள்ளுவர் வாசுகி திருமண மண்டபம் ஆகியவை அமைந்துள்ளன. இத்திருக்கோயிலின் முக்கிய வருவாயாக கட்டணமுறை வாகன நிறுத்துமிடம், திருமண மண்டப வாடகையும் உள்ளது. திருவள்ளுவர் திருக்கோயில் மற்றும் அன்னை காமாட்சி உடனுறை ஏகாம்பரநாதர் திருக்கோயில் திருப்பணி கடந்த 27.04.1973 அன்று அப்போதைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, 1975 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடத்தப்பட்டது. அதனை தொடர்ந்து இத்திருக்கோயிலுக்கு மீண்டும் 2000ஆம் ஆண்டு திருப்பணிகள் தொடங்கப்பட்டு 2001ஆம் ஆண்டு மார்ச் மாதம் குடமுழுக்கு நடத்தப்பட்டது.

2023-2024ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை சட்டமன்ற மானியக் கோரிக்கை அறிவிப்பின்போது, "சென்னை, மயிலாப்பூர், முண்டகக் கண்ணியம்மன் திருக்கோயிலுடன் இணைந்த திருவள்ளுவர் திருக்கோயிலுக்கு 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்" என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் 19.17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 தொகுப்புகளாக திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. அதில் திருக்கோயிலை புனரமைப்பு செய்வதற்கு ஏதுவாக 1.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அங்குள்ள பழைய கட்டடங்களை அகற்றுதல், புதிய வாகன மண்டபம், நூலகம், மடப்பள்ளி மற்றும் சுற்றுசுவர் கட்டும் பணிகளும், 2.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு, வாகன நிறுத்தம், பொதுக்கழிப்பிடம் கட்டும் பணிகளும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஏற்கனவே தொடங்கி வைக்கப் பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### கருங்கல்லால் தரைத்தளம் அமைப்பு!

அதனைத் தொடர்ந்து, திருவள்ளுவர் திருக்கோயிலில் 2.07 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கருங்கல்லினாலான பொற்றாமரை குளம் அமைத்தல் மற்றும் கருங்கல் தரைத்தளம் அமைக்கும் பணிகள், 8.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அருள்மிகு திருவள்ளுவருக்கு கருங்கல்லினாலான புதிய கர்ப்பக்கிரகம், பிரகார மண்டபம் மற்றும் திருவள்ளுவர் பிறந்த இடத்திற்கு புதிய கருங்கல்லினாலான மண்டபம் கட்டும் பணிகள், 2.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அருள்மிகு வாசுகி அம்மையாருக்கு கருங்கல்லினாலான புதிய கர்ப்பக்கிரகம் அமைத்தல், புதிதாக கருங்கல்லினாலான முப்பால் மண்டபம் கட்டும் பணிகள்;

2.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் சன்னதி மற்றும் மகாமண்டபம் கட்டுதல், காமாட்சியம்மன் சன்னதி, கருமாரியம்மன் சன்னதி, பைரவர் சன்னதி, ஆஞ்சநேயர் சன்னதி, சண்டிகேஸ்வரர் சன்னதி, நடராஜர் சன்னதி மற்றும் நவக்கிரக சன்னதி ஆகிய சன்னதிகள் கட்டும் பணிகள்;

**என மொத்தம் 15.54 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திருப்பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.**

### திருவள்ளுவருக்கு புகழ் சேர்த்த கலைஞர்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருக்குறளுக்கு உரை எழுதியதோடு, அய்யன் திருவள்ளுவருக்கு சென்னையில் ஒரு கோட்டத்தையும், கன்னியாகுமரியில் வான் உயர சிலையையும் அமைத்து, அவருக்கு புகழ் சேர்த்தார்.

அவர்தம் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குமரியில் அமைந்துள்ள அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு வெள்ளி விழா கொண்டாடியதோடு, மயிலாப்பூர், திருவள்ளுவர் திருக்கோயிலை புனரமைக்கும் வகையில் கருங்கல் கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தது சிறப்பிற்குரியதாகும்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, இணை ஆணையர் பொ.ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக மயிலாப்பூரிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, இந்து சமய அறநிலையத் துறை சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி. ரேணுகாதேவி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.